செ.வெ.எண்.37 நாள்: 21.01.2021

# தூத்துக்குடி மாவட்டத்தில் மதுரை - தூத்துக்குடி மற்றும் மணியாச்சி - நாகர்கோவில் இருவழி அகல இரயில்பாதை அமைக்கும் பணிக்கு ஓட்டபிடாரம் வட்டம், மருதன்வாழ்வு நாரைக்கினறு மற்றும் கயத்தார் வட்டம் இளவேலங்கால் ஆகிய கிராமங்களில் நிலஎடுப்பு செய்வது தொடர்பாக பொது விசாரணை 29.01.2021 அன்று மாலை 4.30 மணியளவில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து நடைபெறுகிறது – மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

தூத்துக்குடி மாவட்டத்தில் மதுரை - தூத்துக்குடி மற்றும் மணியாச்சி - நாகர்கோவில் இருவழி அகல இரயில்பாதை அமைக்கும் பணிக்கு ஓட்டபிடாரம் வட்டம், மருதன்வாழ்வு நாரைக்கினறு மற்றும் கயத்தார் வட்டம் இளவேலங்கால் ஆகிய கிராமங்களில் நிலஎடுப்பு செய்வது தொடர்பாக தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்பு சட்டம் 1997 பிரிவு 3(2)- ன் கீழான பொது அறிவிப்பு நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டு அதன் பேரிலான பொது விசாரணை 28.01.2021 அன்று மாலை 4.30 மணியளவில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து நடைபெற உத்தரவிடப்பட்டிருந்தது. மேற்படி பொது விசாரணை நிர்வாக காரணங்களுக்காக தற்காலிகமாக ஒத்தி வைக்கப்படுகிறது. மேற்படி பொது விசாரணை 29.01.2021 அன்று பிற்பகல் 4.30 மணிக்கு ஓட்டபிடாரம் வட்டம், மருதன்வாழ்வு நாரைக்கினறு கிராமத்திற்கும் பிற்பகல் 5.00 மணிக்கு கயத்தார் வட்டம் இளவேலங்கால் கிராமத்திற்கும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து நடைபெற உள்ளது என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.